Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

பரமபதி துணை.

தெட்சணாமூர்த்தி மனோன்மணி தீட்சை

என்னும்,

# அகஸ்தியர்கற்பதீட்சைசா

காப்பு வெண்பா.

ஆதிமணி ஞானமது ஆராய்ந் தொருநாலுந்
தேடுமிது தீட்சை திடங்கொண்டு—வீடுமென
நாதவிந்தை சந்திசிவ நாடுமித்தை வாசித்தர்
மாதவத்தை வைக்குமனம்.

தீட்சை நூல்.

அருளான தீட்சைபத்தும் நாறுக்குள்ளே
அடக்கியே ஆனந்த சிவத்தைப் போற்றி
இருளான மாயைதனை இட்டகற்றி
ஏகாந்த வாலையிரு பதத்திலேலே
பொருளான பூரணத்தி லுதயஞ்செய்து
பூரையென்ற ஞானவெளி யெங்குமாச்சு
தெருளான மனோன்மணியைப் பூசைசெய்து
செப்புகிறேன தீட்சைபத்துந் தேர்ந்துகொள்ளே. (1)

கொள்ளவே குருவான தீட்சைதன்னைக்
கூறார்கள் நாதாக்கள் திறந்தாரானும்
விள்ளவே மிஞ்சிடுவா ரென்றுசொல்லி
வேறொன்றைச் சொல்லியே மறைத்துப்போட்டு
பிள்ளைகட்கு மின்னமொன்றைச் சொல்லிவிட்டார்
போரான அகாரமதை மறைத்துப்பாடித்
தள்ளவே தீட்சைபத்து மறிவாரென்று
சாற்றினா ரஞ்செழுத்தைச் சார்ந்துபாரே. (2)

பாரப்பா அஞ்சாலே அஞ்சுமாச்சு
    பார்க்கவே பரைக்குமிது பரிவாய்க்காணும்
நேரப்பா நேருதடா அஞ்சு அஞ்சு
    நிலைத்துதடா மவுனமொடு மிருபத்தொன்றாஞ்
சேரப்பா சிவதீட்சை பத்தேயாச்சு
    திருசத்தி தீட்சைபதி னென்றதாகும்
ஆரப்பா தீச்சைகண்டு உரைத்தபேர்கள்
    அரகரா அகண்டமென்ற வாமிதானே. (3)

வாலை பூசை.

வாமியெனும் வாலைதனைப் பூசைசெய்ய
    மகத்தான சித்தரெல்லா மறைத்துச் சொன்னார்
காமியெனுங் காரணிதன் பூசைமார்க்கம்
    கடவுள்பரஞ் சோதியெனக் குபதேசித்தார்
பூமியெனும் பூரணியே ஆதிசத்தி
    புவனையடா வாலைதிரி புரையுமாச்சு
நாமியெனும் நாமமிது மூன்றுபேரும்
    நடம்புரியப் பூசைதனை நாட்டுவேனே (4)

நாட்டுதற்குப் பத்மினியே முதலேயாகும்
    நன்மைபெருஞ் சித்தினியோ யிரண்டதாகும்
நீட்டுதற்கு அத்தினிதான் மூன்றேயாகும்
    திரிபுரையும் புவனையொடு வாலைசோதி
காட்டுதற்குச் சங்கினியோ மவுனவீதி
    கண்டவர்க்கு அஷ்டசித்தி குளிகைளய்தும்
பூட்டுதற்கு முதற்பூசை வாலைவாலை
    புகழ்பெறவே பத்மினியாய் சனிகையென்னே. (5)

மனோன்மணி யபிஷேகம்.

என்னப்பா பத்மினிதான் சொரூபங்கேளு
    இயம்பினர் கொங்கணர்தன் நடுக்காண்டத்தில்
பொன்னப்பா பொற்சிலைபோல் வாலைதன்னைப்

உன்னப்பா களங்கமற்ற மனங்கல்லாகி
    புறுதியென்று அறிவாலே உறுதியாக்கி
மின்னப்பா மின்னனையாந் தாயுமாவாள்
    விளங்கவே நீராட்டிக் கதம்பஞ்சாத்தே. (6)

கதம்பகஸ்தூரி பூசுதல்.

கதம்பமொடு களபகஸ் தூரிதன்னை
    கஞ்சமல ரடிதொடுத்துத் தேகமெங்கும்
இதம்பெறவே பூசிடுபொன் சரிகைச்சல்லா
    இடைசுத்தி யுடையுடுத்திக் கொலுவும்வைத்து
பதம்பெறவே தெரியாது தாயின்நேர்மை
    பாரோர்க்குத் தெரியாது உனக்குத்தோணும்
மதம்போக்கி மணியாக்கிச் சித்தரெல்லாம்
    மனோன்மணிக்கு முடிவகுத்துச் சிவிவாங்கே. (7)

மனோன்மணிக்கு அலங்கிருதஞ் செய்தல்.

வாங்கியல்லோ வகுப்பெடுத்துச் சந்திரன்போல்
    வட்டமிட்ட கொண்டையின்மேற் குப்பிசேர்த்துப்
பாங்குநெற்றிச் சுட்டிஇரு புரையுங்கட்டிப்
    பட்டமெனும் வாலைபட்டம் நுதலிற்கட்டி
ஓங்குசெவி தனக்குநிதிக் கொப்புமிட்டு
    ஒளிவுபெருந் தரளமணி தொங்கவிட்டு
பூங்குமிழில் நவரத்தினத் தளுக்குமிட்டுப்
    பொன்னோலை காதுதனில் பூட்டுவாயே. (8)

வாலைக்குத் திலதமிடல்.

பூட்டிடமுன் நெற்றியில்வெண் ணீறுமூன்றும்
    பிறைபோலே பூசியதின் மேலேகேளு
தீட்டியதோர் வயித்திமுந் நாலுக்குள்ளே
    செப்புபூரணைச்சந்தி ரோதயந்தான்
நாட்டமுடன் பச்சையிலே புரைத்துநன்றாய்
    நடுநுதலிற் செந்தூரப் பொட்டுமிட்டுக்
கூட்டமிடு நீலகாட்டி நந்திகாட்டிக்
    குருவான நந்தியொளி கூறச்சொல்லே (9)

ஆமென்று மல்லவென்று மிருப்போர்க்கெல்லாம்
ஆத்தாளைப் பூசைசெய்ய அறியப்போமோ
நாமென்ற புலஸ்தியனே யுனக்குச்சொன்னேன்
நாதாக்க ளிப்படித்தான் சொல்வார் சொல்வார்
காமென்ற காமியுட கமலவாணி
கதலியிளந் தண்டருகே யிருந்தசெந்தேன்
ஓமென்ற மந்திரத்தா லுண்ணவேணும்
ஓங்காரக் குண்டலியை யுற்றுக்கேளே. (17)

கேளடா கைகரணத் தாலேதாயை
கெடியான தாமரைப்பூ யிதழை நீக்கி
நீளடா கதலிரண்டு முன்னே நிற்க
நேரான யிதட்பானந் தன்னைமூட்டு
ஆளடா கலசகும்பப் பூசைபண்ணு
அதன்பிறகு சக்கரத்தின் பூஜைபூஜை
கோளடா யென்னுதே புலஸ்தியா நீ
கூறுகிறேன் வாலைதோத் திரத்தைக்காணே. (18)

மனோன்மணியைப் பூஜைசெய்தல்.

காணமுதே வனமயிலே அனையேயோகக்
கன்னியரே மின்னரசே கலைகட்கெல்லாம்
ஊணுயிரே அருள்நிலமே வடிசெந்தேனே
உற்றசிவ மந்திரமே உலகமெங்கும்
பூணரசே பூண்டவளே அமுதகும்பம்
புடைத்தெழுந்த காரிகையே பொன்னேமின்னே
ஆணரசே பெண்ணரசே யென்னையீன்ற
அம்பிகையே உன்பதமே என்றுபற்றே. (19)

பத்தான திட்சைபத்தும் நாதவிந்து
பராபரையே மனோன்மணியே மயேசுரக்தி

உத்தான பாக்கியமே தவமேதானே
ஓங்காரி ரீங்காரி ஆங்காரசக்தி
முத்தான பரஞ்சோதி யென்றுவெண்ணி
மூலவருள் மந்திரத்தை யுரைத்துப்போற்றே. (20)

போற்றியே பணிந்தெழுந்து கடிகடத்தில்
புரியட்ட மந்திரத்தால் மணியைச்சுத்தி
வாழ்த்தியே அஞ்சுமலர்த் திட்சையாலே
மயங்காமல் மூன்றிதழாற் சுற்றுமிட்டு
ஆத்தியே கிரிகைகள் யாவுஞ்செய்து
அதன்பிறகு நாற்பத்தி முக்கோணத்தில்
சேர்த்திடுவாய் சிதம்பரத்தை நடுவேவைத்துத்
திடமான பூசையிது செய்யலாமே. (21)

வாலைக்குத் தீபதூபங் கொடுத்தல்.

ஆமப்பா தூபமொடு தீபங்காட்டி
அசைவுபெறு மணியோசை சங்குமூதி
தாமப்பா சேகண்டி நாதமோடு
தடையறவே பூசையெல்லாஞ் சார்ந்ததானால்
நாமப்பா சொன்னபடி யுனக்குச் சொன்னேன்
நாட்டிலுள்ள மானிடர்க ளித்தைவிட்டு
வாமப்பா பூசையென்று பெண்கள்தன்னை
மருவிடுவா ருலகமெனு மடையர்தானே. (22)

மடையரெனு மானிடர்க்குத் திட்சையேது
மாதாவைப் பூசைசெய்ய மனந்தானேது
கடையரெனுங் கள்ளருக்கு வாதமேது
காரணமாங் குருபாத கடாட்சமேது
உடையரெனும் வழலையுப்பை யறிவதேது
ஓங்காரக் குண்டலிதா னுறுகிறதேது
விடையமெனுஞ் சாபமதில் வீழ்ந்தலைந்து

வாறான திட்சையுட கருவுஞ்சொன்னேன்
மாசற்ற பூசைசெய்ய மகிமைசொன்னேன்
வேறான ஆகாச மூலஞ்சொன்னேன்
மெய்ஞ்ஞான நத்திநின்ற நிலையுஞ்சொன்னேன்
கூறான மனோன்மணி நால் நூறம்பார்த்துக்
குருவான சற்குருவைப் போற்றச்சொன்னேன்
தீரான மானிடர்தம் யாவைவிட்டு
நிச்சயமாய் புத்தியினால் நிலையென்றேனே. (24)

வெண்சாரை கற்பம்

நிலைக்கவொரு கற்பமொன்று சொல்லக்கேளு
நிதியான வெண்சாரை யிருக்குங்குன்றில்
குலைத்துமயத் தின்கீழே வட்டப்பாறை
கூறான புத்தென்பார் திரிகையச்சொல்வார்
மலைக்குமது வுள்ளாக விளைந்தடைத்து
பாதமது சென்றக்கால் மேலேபொங்கும்
அலைக்குமது பூநீறென் றறியவேணும்
அப்பவல்லோ கற்பமது அமுதமாமே, (25)

அமுதமென்ற வல்லியடா ஆதிசத்தி
பாடினா னந்தமென்ற சிவத்தினாலே
குமுதமென்ற வீரியந்தான் வந்துபாய்ந்தால்
கொடுநாகக் கன்னியரைக் கூடிச்சேர்ந்தார்
திமிர்தமென்ற விந்தாலே அஞ்சுமார்க்க
சிவமார்க்க இப்பொருளைச் செப்பார்யாரும்
ஏமதுநின்ற மெய்ஞ்ஞானந் திட்சைகற்பம்
யெழிலான வாதமருளைந் துதானே. (26)

அந்தான சிவாயநமா வென்றபோதே
அம்பிகையுஞ் சிவனுமங்கே ஆடினார்கள்
இந்தான பூரணமு மிரவிதானும்
[illegible]

ஐந்தான சிவாயநமா வென்றபோதே
அம்பிகையுஞ் சிவனங்கே ஆடினார்கள்
இந்தான பூரணமு மிரவிதானும்
ஏகமென்ற தந்திபுள்ளே யேறிக்கொண்டார்
மூந்தான மூர்த்திகளுஞ் சத்திதானும்
மூதண்டர் சித்தர்களுந் தேவர்தானும்
வந்தான ஞானபரஞ் சோதிதானும்
வல்லதுநின்ற நிலைகண்டு மனந்தேர்ந்தாரே. (27)

தேர்ந்ததென்ன மனோன்மணியாள் திட்சையாலே
தெளிவானார் சற்குருவின் பாதத்தாலே
மார்ந்ததென்ன மயக்கமற்ற மனத்தினாலே
மன்னுச்சுஞானமொடு திட்சைவாதம்
சார்ந்ததென்ன வழலையெனு முப்பூவாலே
தனித்ததென்ன சிவனின்ற விந்துவாலே
தேர்ந்ததென்ன வென்று நிலை கண்டபேர்கள்
தித்தசுத்தப் படிகமென நிற்குந்தானே. (28)

நிற்குகின்ற நிலைதனிலே நிற்கவேணும்
நெஞ்சமதி லாறுதலங் காணவேணும்
திக்குலகு அண்டமெங்குஞ் சுத்தியடித்
திரும்பியொரு நொடிபொதிகை சேரவேணுங்
கைக்குள்நின்ற கனியருந்தி யுண்ணவேணும்
கர்த்தாவைச் சித்தமதிற் காணவேணும்
பக்குவத்தை யறிந்தவர்க்கு வாதந்தன்னைப்
பரைபரை யாய்விரித்துப் பாடுவேனே, (29)

பச்சையென்ற உப்பினுட கட்டுச்சொல்வேன்
பாங்கான சவுக்கார வழலைக்கேத்தக்
கொச்சையென்று யெண்ணாதே உப்பினாலே
கூறான வாதமொடு ஞானமாச்சு

இச்சையென்று கட்டுதற்குக் கல்லுப்பாகும்
எடுத்திடு நீ படியெண்டு பாண்டத்துள்ளே
நிச்சயமா பண்டமது முப்பத்தொன்று
நேராக உப்பினுள்ளே புதைத்துவையே. (30)

வைத்தந்தக் கும்பத்தின் மேலேமூடி
வாகாகச் சீலைமண்ணும் வகையாய்ச்செய்து
மெய்த்தந்தக் கலசத்தைப் பெரும்பாண்டத்துள்
மேல்கீழு மூவர்மண்ணை மேவிப்போட்டு
சித்தந்தப் பாண்டமது முன்போற்செய்து
திங்களிரண் டானபின் திறந்துபாரு
மொய்த்தந்த உப்புடனே அண்டங்கட்டி
முறையாகச் சுண்ணம்பின் சூட்சங்கேளே. (31)

சூட்சமென்ற சுத்தவெள்ளைக் கல்லையப்பா
தொடுகுறிபோற் சுண்ணம்பாய்த் துணிந்துசொல்ல
வார்சுதென்று சித்திரைவை காசிதன்னில்
வந்தருளு மக்கினிநட் சேத்திரநாளில்
மூச்சுவிட மாட்டாது சுண்ணக்கல்லு
மூதண்ட பிரவிபட மணலிற்போடு
காச்சாத வெயிற்காயி லுப்பினோடே
காரணமாங் குருவண்டு நீருஞ்சேரே. (32)

சேத்தந்த நீராட்டச் சுண்ணக்கல்லுந்
திடாரச்சுப் புடம்போடச் சுத்தச்சுண்ணம்
ஆத்திபெடு லூசரத்தின் மகையைச் சொல்வேன்
அடுக்கடுக்கா யாகியென்ற வுப்பைத்தொட்டு
வாத்திடவே மூவர்மண்ணைப் பாண்டத்துள்ளே
வடிந்தநீர் தனைக்காய்ச்சு உப்பதாச்சு
[illegible]



நல்லெண்ணெய்.

என்னப்பா நல்லெண்ணெய் விபரங்கேளு
மியப்பார்கள் நாதக்க வீசன்றனும்
உன்னப்பா மூன்சொன்ன அமுரியிற்றன்
ஊரவைத்த எள்ளதனை யுலரப்போட்டுப்
பன்னப்பா பாய்காகத் தோடுதள்ளிப்
பறுக்கையென்ற பருப்பெல்லாம் வாரிக்கொண்டு
பின்னப்பா ஆட்டியெடு எண்ணெய்யாச்சு
போரான சவுக்காரப் பிலுக்குத்தானே. (34)

சவுக்கார வைப்பு.

பிலுக்கான சவுக்காரம் வைக்கமக்கள்
பேசாதே பாண்டமதிற் பொத்தலிட்டுக்
குலாக்காகப் பண்ணுடை மேலேபோட்டுக்
கூறான துயிலதுமேல் விரித்துப்போட்டு
மெதுக்கான உவர்மண்ணை யதன்மேல்போட்டு
மேலாகச் சுத்தஜல மேவத்தாவ
நிலைக்கான தண்ணியெல்லாங் கீழேபோகும்
நிற்குமடா மணற்சுத்தி நிசத்தைப்பாரே. (35)

பாரப்பா நீரெல்லாம் வடிந்தபின்பு
பாண்டமொன்று அடியிலிதை மேலேவைத்து
நேரப்பா உப்பொன்று சுண்ணம்ரெண்டு
நேரான ஊசரமோ படிதானெட்டுச்
சேரப்பா பிடித்தெல்லாம் பொடியதாக்கித்
தெளிவான வெண்ணெய்தனைத் தெளித்ததுலே
ஆரப்பா பாண்டத்தின் மண்மேற்கொட்டி
யமுத்தியதி லுமுறிபடி பதினாறுற்றே. (36)

ஊத்திடுவா யைத்துவிர லாலேயள்ளி
ஓகோகோ வத்தவத்த லூத்தலூத்து
நேத்தியுள்ள காரமெல்லாங் கீழேபாய்ந்து

போத்திடுவாய்ச் சதாசிவத்தை யானாலுன்னிப்
புகழான மனோன்மணியே யென்றுபூசி
ஏத்திடுவாய் ரவியில்வைத்து உண்டையாக்கி
என்னசொல்வேன் சவுக்கார எண்ணெய்வாங்கே (37)

வாங்கியல்லோ புடம்போடச் சுண்ணமாகும்
வழலையெனும் போகுஞ் சித்தர்க்கெல்லாந்
தாங்கியல்லோ சொல்லிவிட்டே னுலகத்தோர்கள்
சவுக்காரம் வைப்பமென்பார் குருக்காணமல்
ஏங்கியல்லோ கண்ணமூட னுவருப்பை
யெடுத்தமூறி யெண்ணெயினு வேறுமென்று
வாங்கிவைப்பர் வண்ணார்க்குத் தாமினுக்காகும்
வழலையென்றாற் றெரிவதுண்டோ மனுடமாடே.(38)

மாடாகத் திரியாமற் சட்டைநாதர்
வகாரமெனு மாயிரத்தில் வழலைச்சுண்ணம்
ஈடாகச் சொல்லிவிட்டா ரெண்ணெய்வாங்கு
மேறுமடா வாதமென்ற துருசிற்றனே
பாடார்கள் மதயானை கட்டுமென்று
பரிவான வாசியைப்போல் மறைத்துப் போட்டார்
வீடாகக் குடிபுகுந்தே னுகையாலே
மெஞ்ஞான வகத்தியனென்று பேருமாச்சே. (39)

## நூலின் பெருமை.

போான ரசிதமென்ன சவுக்காரத்தாற்
பிலத்துநின்ற துருசினுட வீரியத்தால்
சோான புலனுகச் சூதமென்றுஞ்
சித்தர்மூனி யீசுரநத் தேர்ந்துபார்த்து
தோான தென்னுடைய நூலைவைத்து
நிட்சயமாய்ப் படித்தார்கள் கோடாகோடிப்
சொான நூலதனை மறைத்துவைத்து



படித்ததென்ன வாதமெனு மிருநூற்றன்னே
பாங்கான வழலைநட்புப் பரிவாய்ச் சொன்னேன்
பிடித்ததென்ன வென்று நிலைப் பிடித்துப்பார்த்துப்
பிசகாமற் பிடித்தவர்க்கு வாதசித்தி
எடுத்ததென்ன ஆதியென்ற துருசினாலே
ஏகாந்த மலையுலகும் பொன்னேயாகும்
குடித்ததென்ன செந்தூரக் குணத்தினாலே
குறிப்பறிந்து கொண்டுசற் குருவைக்கேளே (41)

கேட்கையிலே உனதுதிரங் கண்டுகொண்டு
கேள்வியினு லுன்மனதை விசாரிப்பார்கள்
பார்க்கையிலே சரியையென்ன ஞானமென்றால்
பரந்ததடா பெண்ணாசைப் பாவியானை
தாக்கையிலே யானைகொண்டாற் சரியையாச்சுச்
சமுசாரந் தள்ளிவிட்டால் ஞானமாச்சு
சேர்க்கையிலே சிவசத்தி தீட்சைதன்னைத்
தெரித்தல்லோ வாதமடர் சித்தர்க்காணே (42)

## சிஷியர்கள் தெரிய வேண்டியது.

தொட்டல்லோ காட்டாத வித்தைபாரிற்
தொட்டெண்ணிப் போட்டாலும் வராதுவித்தை
விட்டல்லோ தன்னாலே யாருமென்று
மேதினியி லிறந்தவரோ கோடாகோடி
கெட்டல்லோ ஆண்மையினால் மாயைமூடிக்
கெருவமெனு மாங்கார விடும்பினாலே
பட்டல்லோ கூத்தனுட வலையிற் சிக்கிப்
பதைபதைத்தாற் கேதுகுருபதத்தைப் போற்றே.(43)

போற்றினால் வாசியுட கருவைச்சொல்வோர்
புகழ்ந்துநின்ற வாதமெனும் பிறப்புஞ்சொல்வார்
தேற்றினால் வாசியுட பூசைசொல்வார்
தெளிவான ஞானமநின்ற நிரந்தரச் சொல்வார்

வாழ்ந்தினால் மவுனம்நின்ற வடிவுஞ்சொல்வார்
வாகான பிரணவத்தி னிலையுஞ்சொல்வார்
ஆத்தினாற் குருவாக்கால் அறியவேணும்
அல்லாட்டா லொன்றுமில்லை யறிந்துபாரே. (44)

அறிந்துகொண்டு மித்தனையுஞ் சோதித்தாக்கால்
அர்ச்சனைத்துச் சொல்லிவிடு உறுதிசொல்வார்
முறித்துக்கொண்டு திரியாதே வாதஞானம்
மூச்சுவிடார் பேச்சுவிடார் முறையுஞ்சொல்வார்
பிரித்துக்கொண்ட சன்னாசி யனேகருண்டு
பேயருட மயக்கத்திற் போய்ச்சேராதே
உறிந்துநின்ற புளித்தோடம் விரைதான்போலாம்
உத்தமர்க்கு மித்தனையு முண்மையாமே (45)

பொய்க் குருக்கள்

உண்மைவிட்டு ஆண்மையினாற் குருக்களென்றும்
ஓம்நம சிவாயகுரு மூர்த்தியென்றுந்
தன்மைவிட்டுக் குறடுதொட்டுச் சாம்பல்பூசித்
தாவடங்கள் செபமாலை தரித்துக்கொண்டு
தன்மைகெட்டுக் காவிவஸ்திரங்கள்கட்டி
நாட்டிலுள்ள மானிடரை மிரட்டிக்கொண்டு
வன்மைகெட்டுப் பணம்வாங்கு மீனர்தன்னை
மனந்தனிலே நினைந்தாலு மாயையாமே (46)

மாயையிலே திரிவோர்க ளனந்தங்கோடி
மனோன்மணிநால் பார்த்தாக்கா லெல்லாந்தோற்றுஞ்
சாய்கையிலே சார்ந்தவர்க்கு எல்லாஞ்சித்தி
தற்பதத்தின் கிருபையினாற் ஞானமுத்தி
வேளையிலே வேதமட்ட விநோதிபத்தில்
மெய்ஞ்ஞான நந்தியுட வெளியிலிருத்திப்
போகையிலே அங்கிருந்து உபதேசித்தேன்

உண்டான கற்பத்தி னுறுதிகாட்டி
உத்துநின்ற உப்பினுட கட்டுக்காட்டிப்
பண்டான சவுக்கார வைப்புக்காட்டிப்
பார்புகழும் ரசிதமென்ற ஆதிகாட்டிக்
கொண்டேருஞ் செந்தூரக் குறியுங்காட்டி
குருவான சற்குருவைக் குறித்துக்காட்டி
மீண்டான வுலகத்தின் குருவுங்காட்டி
வேதையத்த சாரமெல்லாம் விளம்பினேனே. (48)

விளம்பினேன் ஞானமென்ற தீட்சையெல்லாம்
மெய்நிறைந்த சத்திசிவன் நின்றமார்க்கம்
குழம்பிநீ போகாதே மாயைவிட்டுக்
கூடுவாய் துறவியென்ற மவுனந்தன்னிற்
பழம்பொருளாய் நின்றறிவை யறிந்துபாரு
பரமசிவன் தீட்சைபத்தும் சத்திபத்தும்
நிழம்பெறவே காந்தியொளி சுத்தவெள்ளை
நின்றநிலை தெரிவோர்க்கு நீசம்போமே. (49)

நீசமென்னும் காமவலை நீங்கிற்றானால்
நிலைத்ததடா சிவகிருபை நெஞ்சந்தன்னில்
பாசமென்ற பெண்மாயை காய்ந்துபோச்சுப்
பாரம்பரையாஞ் சத்தியுட தீட்சையாலே
கோசமென்ற பிசமிது உறுதியாச்சுக்
குருநாதன் தெரிசனத்தா லெல்லாஞ்சித்தி
நேசமென்ற கருவேது மனதாற்றேர்ந்து
நிச்சயமா பொருநினைவாய் நினைத்துப்பாரே. (50)

தெட்சணாமூர்த்தி யென்றபேர் கொடுத்தது

பாரப்பா அண்டபகிரண்டந்தாண்டிப்
பாதாளச் சக்கரமும் பதமுந்தாண்டி
நேரப்பா அகண்டபரி பூரணத்தில்
நிலைத்து நின்றேன் சுழினையென்ற துறவினுள்ளே.

ஆரப்பா வென்றுசொல்லிச் சிவனும்வந்தார்
அப்போது அகத்தியனென்றுசொன்னேன்
பேரப்பா தெட்சணாமூர்த்தி யென்று
பேருவைத்தப் பிரபலமாய்ப் பேருண்டாச்சே. (51)

பேர்கொடுத்து மெஞ்ஞானந் திறந்துசொன்னார்
பெருஞானம் பாடுதற்கு அருளுந்தந்தார்
ஆர்கொடுத்தார் சிவனுமையு மெனக்குத்தந்தார்
ஐயருட கடாட்சத்தால ருளைப்பெற்றேன்
தேர்கொடுத்துச் சாத்திரங்கள் பாடுதற்கு
நிச்சயமா யென்னாவி லெழுதிவிட்டார்
சீர்கொடுத்து இந்நூலைப் பாடுமென்று
செப்பியே மகாமேனைக் கருதினாரே. (52)

கருதிநின்ற பொறிபுலனுங் கர்மத்தாலே
காசினியில் திட்சையில்லைக் களங்குபோச்சு
உருதிநின்று கண்டவர்க்குத் திட்சையப்பா
ஓங்காரக் கணபதியா மருளினாலே
பொருதிநின்ற அட்சரங்க ளைம்பத்தொன்றும்
புகழான ஆறுதலந் தன்னில்நிற்கும்
அருகிநின்ற அஞ்செழுத்தும் அகாரத்துள்ளே
அமர்ந்திருக்கு மூன்றெழுத்தும தற்குள்தானே (53)

தானென்ற பத்துவகை திட்சையாலே
சாதகமாய்ப் பிரமையென்ற விதியைத்தள்ளி
ஏனென்ற உலகத்தி லெல்லோருக்கும்
இம்மையல்லோ பலகாரம் பண்ணச்சொன்னேன்
கோனென்று அவனிருந்த நிவிதானப்பா
கொல்லுதடா உலகத்திற் கூத்தனென்று
நானென்ற திட்சைகண்டா லிதுமெய்யாகும்

நாதனென்ற நாதனுக்கு விதிதானுண்டோ
நந்திநின்ற வொளிதனிலே யிருள்தானுண்டோ
வாதமென்ற வாதிகட்கு மயக்கமுண்டோ
வழலையுப்புக் கண்டசித்தன் மாள்வதுண்டோ
வேதமெனுஞ் சாஸ்திரங்கள் கற்றிருப்போர்
மேதினியில வர்களுந் தானமாய்வதுண்டோ
பூதமென்ற ஐந்துமன மயக்கங்கண்ட
புண்ணியர்க்கு விந்துல்தான் புனிதமாமே. (55)

கனையெருமைப்பால் கற்பம்.

புனிதமென்ற தென்பொதிகைச் சேருவோர்க்குப்
புகழ்பெருகுங் காந்தமலை படியிற்சென்று
கனையெருமை விருட்சமதைச் சுத்திவந்து
கன்னதுபோ லேகதறிக் கறந்துபாலை
இனமுடனே பீங்கானில் முன்னேவைத்து
யீரெட்டு உருவேத்திச் சிவாயமென்று
மனிதரென்ற மாயைவிட்டுக் கழஞ்சுபத்து
மாதமுண்ணப் பெண்ணாசை மடிந்துபோச்சே. (56)

போச்சடா மதனுடைய ஆண்மையெல்லாம்
பூலோக காரணமாய்ச் சித்தனென்று
ஆச்சடா அண்டபகி ரண்டத்தாண்டி
ஆறுவரை ஏறுதற்கு அறியலாச்சு
மூச்சடா நந்தியிலே யொடுங்கிப்போச்சு
மூதண்ட மதியமுதஞ் சிந்தலாச்சுப்
பேச்சடா யினியேது மவுனியாச்சுப்
பிரமனுட கெணிதமது யில்லைப்போமே. (57)

காந்தமலைச் சித்தரைப்பார்க்கச் சொல்லுதல்.

போமப்பா மலையிலொரு கடிகையேறப்
புத்தர்மதச் சித்தரதில் மெத்தவுண்டு

தாமப்பா அவ்விடத்திற் சென்றேதானும்
தனதாக வருவோரைப் பணிந்துபோற்றி
தாமப்பா உங்கள்பிள்ளை யென்றுசொல்லு
நாதாக்கள் வாருமென்று நலஞ்சொல்வாரே. (58)

சொல்லுவார் கையாத வேம்பின்கற்பம்
சோதிகரு நெல்லிவெண் சாரைகற்பம்
சொல்லுவார் கைமுறையா யுண்ணுதற்குச்
சுகமாகத் தங்கள்கிட்ட விருக்கச்சொல்லி
வெல்லுவார் பொன்மூள்ளிச் செடியைக் காட்டி
மெய்யான வாதமிது விளங்குமென்று
சொல்லுவா ரொருவருட மிருந்துதேர்ந்து
சொற்பெரிய சித்தர்களைத் தெண்டம்பண்ணே. (59)

வியாக்கிர மரைத்தெரிசிக்கச் சொல்லுதல்.

தெண்டனிடு மேல்புறத்தில் வழிநேராகத்
தெரியாத குகைவாசல் திறக்கச்செய்து
கண்டளவி லுட்புகுவார் நீயுங்கூடக்
கலங்காமற் போய்ப்புகுதக் காரணங்கள்
விண்டிடவும் நாவுமுண்டோ பாவுமுண்டோ
வெட்டவெளி யாயிருக்கு மூலமேபாதை
கொண்டபின்பு முனிசித்தர் தன்னைக்காண
குருவான வியாக்கிரமரைக் குறித்துப்போற்றே. (60)

போற்றப்பா அஞ்செழுத்தை யையஞ்சாகப்
புகழ்ந்தத் தெட்டுருவாகிற் சித்தியாச்சு
ஏத்தப்பா எட்டெழுத்தைப் பதினாறாக
யிருந்தவியாக் கிரமரங்கே இனிதுகூர்ந்து
பாத்தப்பா வாருமென்பார் பாதம்போற்றப்
பரமரக சியங்காதி லுபதேசிப்பார்
ஆத்தப்பா வெட்டிருவில் மேலேபார்க்கில்



குகை காண்பித்தல்.

கதவுதனைக் கண்டாயோ மைந்தாவென்பார்
காரணனே யுன்கிருபை கண்டேனென்றும்
உதவிதரு மனோன்மணிதன் வாசலுக்கு
உட்கதவு மிதுபிள்ளா யென்பாரையா
பதவிபெற்றே னென்றவிற் றிரவுகோலால்
பரிச்சென்று திறந்துபெரும் பாதைகாட்ட
இதமுடனே குருபதத்தைப் பணிந்துபோற்றி
ஏறுவாய்த் திகம்பரமென் றெண்ணித்தானே. (62)

எண்ணியே கடிகையொன்று சென்றாயானால்
என்னசொல்வேன்மனோன்மணிதானிருந்தகுன்றம்
வண்ணமுள்ள பசும்பொன்னாற் குகைதானப்பா
மாசற்ற நவமணியைப் பதித்தவாசல்
புண்ணியமாஞ் சித்தர்வெகு கோடாகோடி
புகழ்பெரிய ரிஷிமுனிவ ரனந்தங்கோடி
கண்ணும்விண் ணுங் கொள்ளாது காரணங்கள்
கயிலாசப் பதவியிது காணுவோர்க்கே. (63)

காணுதற்கு வட்டமதா சந்திரன்போலே
களங்கமற்ற பீடமொன்று குகைக்குள்ளாகத்
தோணுதற்கு என்னசொல்வேன் நடுமையத்திற்
சொற்பெரிய மனோன்மணிதா னிருந்தகாட்சி
பூணுதற்கு விசுமடா மதிதான்கோடி
புகழ்வன்னி ரவிகோடி யொளிவொமெத்த
நீணுதற்கு யிருந்தருளும் பெரியோர்தம்மை
நீபணிந்து அவ்விடத்தில் நின்றுபாரே. (64)

பார்க்கையிலே நாதாக்க ளுனையேமெச்சிப்
பாதைகண்டு வந்தாயோ போதிகைக்கப்பா

ஏர்க்கையிலே மனோன்மணியைக் கண்டுகொண்டு
இதமாகச் செல்லுமென்பார் குகைக்குட்பூந்து
பார்க்கையிலே மனோன்மணியைப் பணிந்துபோற்று
பரமான அஞ்செழுத்தைப் பகருவாரே. (65)

மனோன்மணியைக் கண்டது.

அஞ்செழுத்தும் வஸ்துவுட கிருபைகாணும்
அகண்டபரி பூரணத்தி லாடலாகும்
நெஞ்செழுத்தை நினைத்திட மற்றெழுத்தோயில்லை
நீறாகிப் போகுமடா யோகியாவாய்ப்
பிஞ்செழுத்து ருசியாகுங் கனியுங்காணும்
பேரான மதியமுத முண்ணலாகும்
வஞ்சகத்தை யடித்தோட்டி யகத்தையாட்டி
மனோன்மணிதான் பொதிகைவழி காட்டினாளே. (66)

காட்டினாள் செகசோதி மகிமைதன்னைக்
கண்ணொளியாம் விண்ணொளியின் காந்திதன்னை
ஊட்டினாள் மூதண்ட லேகியத்தை
உட்கொண்ட போதிலே யுபாத்தார்க்குந்
நாட்டி நீ மலையைவிட்டுப் பொதிகைக்கப்பா
தான்வருவாய் நானுமங்கே யிருப்பேன்கண்டு
கூட்டினார் சகலசித்து முனக்குள்ளாகக்
கூடுகிற வழி கண்டு கூறினேனே. (67)

கூறினே னிதுக்குமுன்னே காந்தமென்ற
குன்றினுக்கு வடமூலை காதமுண்டு
ஆறினே னவ்விடத்தில் நதிதானுண்டு
அதுக்கடுத்தக் கிழ்புறத்தில் அதிசயங்கேள்
ஊறுநீர் நச்சுநீர்ப் பொய்கையொன்று
உரைத்திடுவா ருலகமெல்லா முண்மையாகப்

மறைத்திருந்த நீரினுட பேரைக்கேளு
மானிடர்க்கு நச்சுநீர் விஷநீரென்றும்
உரைத்திருந்த பெரியோர்க்கு அமுதமென்றும்
உண்மைதரும் வழலையென்றும் வஸ்துவென்றும்
நிறைத்திருந்த பானமென்று லகிரியென்றும்
நீங்காத பச்சைநீர் பூநீரென்றும்
குறைத்திருந்த யீசனுக்கு விந்துவென்றும்
கூறுவார் மதியமுதங் கொள்ளக்கேளே. (69)

கேளப்பா அந்நீரைக் கொள்ளுதற்குக்
கெடியாக முன்வாமி பூசைசெய்து
நீளப்பா யோகியென்ற விரத்தனாகி
நீங்காத சிவகிருபை நெஞ்சில்வைத்து
வாவப்பா கலையடுக்க வந்துநின்று
வாகானக் கல்லையொன்றை வாங்கிப்போட்டு
வேளப்பா கலசத்தில் நீரைமோர்ந்து
வினைதீரக் கொள்ளுகிற விதத்தைக்காணே. (70)

காண்பதற்கு யிந்நீரைப் பீங்கான்றன்னில்
கலங்காமற் காற்படிதா னிருத்திக்கொண்டு
ஊண்பதற்கு சிவசத்தி எழுத்தினாலே
உருவேற்று மஞ்செழுத்தை யொருநூற்றெட்டுப்
பூண்பதற்குப் பூரமொரு கழஞ்சிதன்னைப்
பொடியாகத் தூவிடவே பாலாய்ப்போகும்
வீண்பதற்கு நச்சுநீ ராயிருக்கும்
மெய்ஞ்ஞானச் சித்தருக்கு அமுதத்தானே. (71)

மெய்யான பாலையுண்டு தேறவேணும்
விஷமான நஞ்சையுண்டால் மாளவேணும்
பொய்யான சீசர்களைத் தள்ளவேணும்

பையான காந்திகரு பாசப்பத்தும்
    பாலுண்டு ஒடுக்கமென்ற சமாதிவிட்டு
ஐயாகேள் காந்தமலை பாடிவிட்டேனென்று
    அப்பவல்லோ கலையெருமைய முதங்கொள்ளே. (72)

கொண்டாக்கா லெனைக்கண்டு கொள்வாயப்பா
    கூறுவே னினைப்போலே நீடூழிவாழ்க
விண்டாக்கால் தெரியுமப்பா அட்டசித்தும்
    விளையாட குருவைவைத்து விளக்கஞ்செய்வேன்
உண்டான பொருள்களெல்லா முனக்குள்ளாச்சு
    ஒகோகோ யித்தமுறை யொருவர்சொல்லார்
பண்டான பீசனித்தப் படியெனக்குப்
    பக்குவத்தில் தந்தைதான் பாடினேனே. (73)

நூல்தொகுப்பு

பாடினேன் ஞானத்தில் பத்துநூறு
    பாங்காகக் குருமுடிப்பு நூறுசொன்னேன்
கூறினே னறிவாகத் தீட்சையப்பா
    குருவாக யிருநூற்றிற் குறியைச்சொல்லித்
தேடினே பூசைவிதி யொருநூறன்னே
    சிவகாமி மனமகிழப் பூசைசெய்ய
ஆடினேன் பன்னிரண்டு காண்டத்தன்னில்
    ஆராய்ந்து பார்த்தறிந்தே அறிவித்தேனே. (74)

வித்தான ஆயிரத்தி யிருநூறுக்குள்
    மேன்படவே சவுமியமாம் வாதமென்று
சித்தான காரியத்தைத் திறந்தபோட்டேன்
    தீரமான சவுக்காரச் சுண்ணமாதி
கொத்தான வயித்தியந்தா னிரண்டுலட்சங்
    கூறினேன் லட்சத்தைச் சுருக்கிப்பாடி
முத்தாகக் கையாகத் தேர்ந்துசொன்னேன்

தேர்ந்தல்லோ குணங்குறியுங் கற்பத்தோடு
    திசையான வாயிரத்துள் தெளிவாய்ச்சொல்லி
ஆய்ந்தல்லோ உலகோர்க்கும் பூரணந்தான்
    ஆயிரத்தி யிருநூறில் விரித்துச்சொன்னேன்
சாய்ந்தல்லோ போகாமல் நாநூறுக்குள்
    சகலகலை சேதியெல்லா மடக்கிப்போட்டேன்
வாய்ந்தல்லோ வாதவைத் தியங்கள்தானும்
    மகத்தான யாக்கோபு விண்டிட்டாரே. (76)

தானான மனக்கோலம் யிருநூறுள்ளே
    சகலசித்து மானதிந்த நூலினாலே
ஏனான இருநூற்றுப் பதினொருக்குள்
    இயம்பினேன் யாவையுமே வெளியதாக
கோனான யந்திரமந்திர சாலமெல்லாங்
    கூறினேன் சத்திசாலத் திலேதான்
தேனான நான்சொன்ன சாஸ்திரத்தன்னை
    திரட்டினாற் தெரியுமிந்தத் தெளிவுதானே. (77)

தெளிவான காந்தமலை காணவேணுந்
    சித்தரென்றால் மனோன்மணிதான் சேரவேணும்
அழியாத கற்பமுண்டு யிருக்கவேணும்
    ஆனந்த தீட்சைபத்து மறியவேணும்
வெளியான பொதிகைவரை யேறவேணும்
    மெஞ்ஞானி யென்றுபே ரெடுக்கவேணும்
ஒளியான நந்திபடா காணவேணும்
    ஒகோகோ உண்மையெல்லா மோதுவாயே. (78)

ஓதவே மவுனதெரி சனத்தினாலே
    உரவான பெண்ணாசை தள்ளச்சொன்னேன்
கோதறவே கோசமொடு பீசங்காட்டிக்
    குடிகெடுக்கும் பிரமனுட விதியைத்தள்ளி

தென்னிலங்கும் காந்தமலை தன்னைக்காட்டிப்
போதவே கனையெருமை யமுதமூட்டிப்
புனிதரெனுஞ் சித்தர்தமைக் காட்டினேனே. (79

காட்டினேன் குகையில் வியாக்கிரமர்தானும்
காரணமா மனோமணிதன் விருப்புங்காட்டித்
தீட்டினேன் பொதிகைவழி பேறுயர்க்கம்
திடஞ்சொன்னே னேஅதற்குச் சித்தனென்று
ஊட்டினேன் நச்சுநீ ரமுதமாக
உண்மையுள்ள நூலினுட வகையுஞ்சொன்னேன்
பாட்டினு லென்னவரு மென்பார்மாண்பர்
பரகெதிக்கு வழிகாணப் பாதையாமே. (80)

கற்பமுறை.

பாதையென்ற அட்டாங்க யோகியானால்
பார்மகனே கற்பமொன்று சொல்வேன்கேளு
பேதையென்று மலையாதே பொதிகைக்கப்பா
பிரபலமாய்க் கோடியோசனைதான்மேரு
கோதையென்ற அரவதிலே யிடப்பாகத்திற்
கொடுவிடமாம் வெண்சாரை வலப்பாகத்தில்
வேதையென்ற மேருகிரி தனிலேபின்னி
விளையாடி மீண்டுமொன்றாப் விஷமதாமே. (81)

விஷமான அரவிரண்டு பிணைந்துநிற்கும்
வேதாந்தக் காமமெனும் பீடந்தன்னைக்
குசமான யோகியரவ் விடத்திற்சென்றால்
கொடுவிடந்தான் மூழ்கிவிடு மலமாய்ப்போவார்
நிசமான குளிகைகொண்ட சித்தரானால்
நிமிசத்திற் காமபீடத்தை நீக்கி
திசமான தீட்சையினாற் போனாலுந்தான்

தேர்ந்துபா ராதியந்தம் நடுவுமில்லா
தேயிருந்த காலத்தில் தெட்சணத்தில்
சார்ந்துபார் நான்பிறந்த பின்புதொண்ணூற்
றாறான கோடியெனுந் தரித்தார்யோகி
ஆய்ந்துபார் சத்திசிவ னெனக்குமுன்னே
அப்பனைத்தான் காமமெனும் பீடந்தன்னை
நேர்ந்துபார் கொண்டுவந்தா லீசனென்ற
நேமமென்று சொன்னதினால் நான்சென்றேனே. (83)

சென்றளவிற் றெண்ணூற்றுக் கோடிபேருந்
திடம்போலே தொடர்ந்துவந்தார்வடமேரென்ற
குன்றளவில் நின்றிறந்தார் சிலபேரப்பா
கொடுவிஷத்திற் றிசையாறு ரதனிற்பாதி
நன்றழகு காமபீடத்தைவாங்கி
நழுவவிட்டு மாண்டார்கள் தோஷந்திர
வென்றளவில் வெற்றிகொண்டு சிவன்முன்வந்து
விமலருக்குங் காயாசங் கொடுத்தார்பாரே. (84)

காயாசங் காமமெனும் பீடந்தன்னைக்
கழராமற் சுத்திநிற்கு மருணைகாந்திக்
காயாச மதுவப்பா மேருதன்னிற்
கனகமென்ற கற்பமது காமபீடம்
காயாசம் வாங்குதற்குச் சித்தரெல்லாங்
காமமெனும் பீடமது கொண்டுவந்தார்
காயாசங் கொடுப்பேனான் வேதைகாணக்
கற்பமொன்று கோடியெனுங் காலந்தானே. (85)

காலனென்ற சேதியப்பா காண்பாசந்தான்
காவியினாற் றுவைத்ததுணி தனக்குமாதர்
சீலனென்று வொளித்ததுணி மெத்தவுண்மை

வாலையென்ற செபமாலை யறியாமூடர்
மாப்பாகி பூண்டதொரு வண்டருக்கு
நூலையென்றுங் காட்டாதே பொருட்சொல்லாதே
நூற்றாண்டு தவமிருந்தும் நூல்காண்பாரோ. (86)

பார்த்ததுமுன் சிவன்சொன்ன ஞானமெந்தன்
பக்குவத்திற் சத்திவைத்த திட்சைபத்தும்
சேர்த்ததுமுன் மவுனமொடு மிருபத்தொன்றுஞ்
செப்பினாரிரு பேருந் தெளியச்சொல்லிக்
கோர்த்ததிந்த நூல்சத்தி சிவத்தினாணை
குருவான பரஞ்சோதி கூட்டமாணை
ஏர்த்ததிந்த நூலைவிட்டால் ஞானவாத
மில்லையப்பா திட்சைமூத லெவர்க்கானாலே. (87)

ஆனான திட்சையெல்லாம் வாமதிட்சை
யப்பனே பகாரமென்ற வஸ்துவாலே
வானான அறிவாலே யறியவேணும்
மற்றொருவர் சொன்னாலும் வாராதுகண்டாய்
தேனான கற்பமென்ன வாதமென்ன
தெரிசனத்தாற் சமாதிகண்ட சித்தர்க்கெய்தும்
கோனான சமாதிநிலை யறியாபட்டை
கொள்ளுவார் சாராயம் வஸ்துவென்றே. (88)

சாராயங் கஞ்சாவைக் குடிப்போரேபெண்
சாண்டுகளை மூத்திரத்தைக் குடித்தால்நன்றே
வீறான யோககண்டைப் பிடிப்பார்மூடர்
வீண்சண்டைப் பிடித்தாலு மெதுவுண்டாமோ
கூறான கற்பத்தை யறியாவிட்டாற்
கொடும்பச்சை நாபிதனைக் கொண்டுமாள்வான்
தீரான துருசுமடா ஆதியாகி

நிந்தையினா லோகமெல்லா மழிந்துபோச்சு
நிலைகண்ட பெரியோர்கள் கண்டகட்டு
மந்தையிலே மதிற்போலே வெளியைக்கட்டும்
வழலையென்ற சவுக்காரம் வந்தவாறுஞ்
சிந்தையினால் நினைத்தபொருட் சித்தியாலே
தெளிவான உப்பப்பா கம்பிநீறுஞ்
செந்தியிலே கோடியுக முருக்கினாலுந்
தேயாது பொறியாது திறம்போகாதே. (90)

போகாது போகாது ஞானிசிவன்
புகழான உப்புமந்தப் படிதானப்பா
வேகாது வேகாது ஞானிதேகம்
மெய்யான உப்புமந்தப் படியேயாகும்
சாகாது சாகாது ஞானவஸ்துத்
தானுமந்தப் படியாகு முப்பூவுப்பு
ஆகாது ஆகாது கறியுப்பப்பா
அவனியுள்ளோர் ஞானமந்த உப்புக்கூறே (91)

உப்பறியப் போகாது மனிதராற்றான்
உலகமெல்லாம் படைத்தகர்த்தன் கனகமேரு
செப்பறிய உண்டுபண்ணி யிருந்தவஸ்தாம்
சிவன்கண்டு எந்தனுக்கு உபதேசித்தார்
இப்பெரிய சித்தருக்கா யுபதேசித்தேன்
ஏகாந்த மனோன்மணியாள் பூசகர்க்கும்
கொப்பரையாந் தேங்காயின் நீரைப்போலே
கூறினேன் மனோன்மணி நூல் நூறுதானே. (92)

மனோன்மணியின் அருளாலே நூறாய்ச்சொன்னேன்
வாகாக யிந்நூலை தேர்ந்துபார்த்து
இனோமணியாந் திட்சையிது பதினொன்பேரும்
தேர்ந்ததெல்லா மெந்தனுட நூலினாலே
வினோமணியாஞ் சூதமதைக் கட்டுதற்கு
விஷமான வெண்சாரை யாலேயாகும்
கனோமணியாம் பசைத்தமண்ணும் விண்ணுமுந்தான்

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை